



# மரம் விழுந்ததில் 17 வாகனங்கள் சேதம்:

## முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும்

**கோலாலம்பூர், பிப். 25-**
**மிகப் பெரிய மரம் திடீரென்று விழுந்ததை அடுத்து 9 கார்களும் 8 மோட்டார் சைக்கிள்களும் சேதமடைந்தன.**

இதனையடுத்து கோலாலம்பூர் மாநகரில் உள்ள மிக பழைமையான மரங்களை அடையாளம் கண்டு அவற்றை வெட்டி வீசுவதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று வங்சா மாஜூ கெஅடிலான் தொகுதி தலைவர் ஹெண்ரி லாய் கேட்டுக் கொண்டார்.

நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் வங்சா மாஜூவில் செக்ஷன் 2, புளோக் ஜி 9 எனும் இடத்தில் ஒரு பெரிய மரம் திடீரென்று பெயர்ந்துள்ளது.

அப்போது கீழே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 9 கார்களும் 8 மோட்டார் சைக்கிள்களும் சேதமடைந்தன. தகவல் தெரிந்து அங்கு விரைந்த கோலாலம்பூர் பொது தற்காப்பு படை அதிகாரிகள் துப்புரவு பணிகளில் ஈடுபட்டனர்.

மரத்தின் கிளைகளை வெட்டி எரிந்து வாகனங்களை மீட்டதாக அந்த படையின் அதிகாரி மேஜர் அகமட் ஜுனைடி தெரிவித்தார்.

இதனிடையே பொது மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதிகளில் காணப்படும் பழைமையான மரங்களை வெட்டி எறிய வேண்டும் என்று ஹெண்ரி லாய் அறிவுறுத்தினார்.

குறிப்பாக வாகனங்கள் நிறுத்தும் பகுதிகளில் இத்தகைய மரங்கள் காணப்படுகின்றன. நள்ளிரவு நேரம் என்பதால் அப்போது வாகனங்களில் யாரும் இல்லை. இதுவே காலை அல்லது மாலை நேரமாக இருந்திருந்தால் மக்களின் உயிருக்கு மிரட்டல் ஏற்பட்டிருக்கும்.

எனவே கோலாலம்பூர் மாநகராட்சி மன்ற அதிகாரிகளின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதே சமயம் இதனை கவனத்தில் எடுத்துக் கொண்டு நோன்புப் பெருநாளுக்கு பிறகு தக்க நடவடிக்கையை மேற்கொள்வதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்றார் அவர்.